THE NEW INDIAN EXPRESS

27 FEB 2023

PAGE 5

# Pondy varsity seminar on India's water crisis

EXPRESS NEWS SERVICE
@ Puducherry


DEPARTMENT of electronic media and mass communication, Pondicherry University, in collaboration with Water Fest 2023, held a seminar titled 'India's Water Crisis and Water Conservation'. The seminar was inaugurated by the vice-chancellor, Gurmeet Singh, with a panel consisting of Dr Vasanti Rao, director general of Centre for Media Studies (CMS), Delhi; Radhika Mulay and Sukrit Sen, Centre for Environmental Research and Living Water Museum; Indian Institute of Science Education and Research (IISER), Pune; Probir Banerjee, PondyCAN; and Dr Radhika Khanna, head of the department. A official release said "'The Last Drop - India's Water Crisis,' a NAT GEO India documentary, was screened. Vasanti Rao and Probir Banerjee shared their thoughts on water conservation in India." The seminar concluded with a workshop by Radhika Mulay and Sukrit Sen. Guests from Auroville, students and faculty of varsity took part in the seminar.

DINAMALAR

27 FEB 2023

PAGE 1

# பல்கலையில் பயிற்சி பட்டறை



■ புதுச்சேரி பல்கலைக்கழக ஆனந்தரங்கர் நூலகம் சார்பில் நடந்த பயிற்சி பட்டறையை துணைவேந்தர் குர்மீத் சிங் துவக்கி வைத்து, பேசினார்.

**புதுச்சேரி, பிப். 27–**

புதுச்சேரி பல்கலைக்கழக ஆனந்தரங்கர் நூலகம் சார்பில் பயிற்சி பட்டறை நடந்தது.

'கல்வி தொடர்பான இதழ்களில் ஆராய்ச்சி கட்டுரைகளை பிரசுரம் செய்வது எப்படி' என்ற தலைப்பில் நடந்த பயிற்சி பட்டறையின் துவக்க விழாவில், பல்கலைக்கழக நூலகர் விஜயகுமார் வரவேற்றார்.

கருத்தரங்கத்தை, பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் துவக்கி வைத்து பேசும்போது, கல்வி மற்றும் ஆராய்ச்சி இதழ்களில் கட்டுரைகளை பிரசுரிப்பது தொடர்பான நடைமுறைகளை ஆராய்ச்சியாளர்களும், மாணவர்களும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

இதுபோன்ற பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்ததற்காக பல்கலைக்கழக நூலகர் தலைமையிலான குழுவினருக்கு பாராட்டு தெரிவித்தார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகத்தை சேர்ந்த பயிற்சியாளர் சுமித்தா சென், இதழ்களில் ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிடுவது தொடர்பான நடைமுறைகள், தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி கூறினார். பல்கலைக் கழக உதவி நூலகர் சிபு நன்றி கூறினார்.

பயிற்சி பட்டறையில் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

DINAMALAR

27 FEB 2023

PAGE 1

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தொலைதூர படிப்புகளுக்கு சேர்க்கை

## ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, பிப். 27–**

புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி திட்ட படிப்புகளில் சேருவதற்கு, ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கலாம்.

இதுதொடர்பாக, பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குனராகத்தால் 20 வகையான பட்டப்படிப்புகள் வழங்கப்படுகிறது.

இதில், சந்தைப்படுத்துதல், பைனான்ஸ், மனிதவள மேலாண்மை, சர்வதேச வணிகம், பொது, சுற்றுலா, செயல்பாடுகள் மற்றும் விநியோகச் சங்கிலி, மேலாண்மை மற்றும் மருத்துவமனை மேலாண்மை ஆகிய 8 எம்.பி.ஏ., முதுகலை பட்டப் படிப்புகளும் அடங்கும்.

மேலும், எம்.ஏ., ஆங்கிலம், ஹிந்தி, சமூகவியல் மற்றும் எம்.காம்.,(பைனான்ஸ்) உட்பட 4 முதுகலை பட்டங்கள் மற்றும் 8 இளநிலை பட்டங்கள் (பி.பி.ஏ., பி.காம்., பி.ஏ., ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல், பத்திரிகை மற்றும் வெகுஜன தொடர்பு) ஆகியவையும் தொலைதூரக் கல்வி இயக்குனரகத்தால் வழங்கப்படுகிறது.

இந்த படிப்புகளுக்கு சேர்க்கை கடந்த ஜனவரியில் துவங்கி நடந்து வருகிறது.வரும் மார்ச் 31ம் தேதியன்று சேர்க்கை முடிவடைகிறது.

புதுச்சேரி பல்கலைக்கழகம், பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளில் சேர முடியாத அனைவருக்கும், தொழில்முறை மற்றும் வேலைசார்ந்த பட்டப் படிப்புகளை தொலைதூரக் கல்வி இயக்குனரகம் வழங்குகிறது.

இந்த பட்டப்படிப்புகள், அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில், தொலைதூரக் கல்வி வாரியம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் எந்த பகுதியில் இருந்தும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை ஆன்லைனில் சமர்ப்பித்து, கட்டணத்தைச் செலுத்தும் வகையில் முழு சேர்க்கை நடைமுறையும் ஆன்லைனில் கொண்டு வரப்பட்டுள்ளது.மேலும் தகவல்களுக்கு, https://dde.pondiuni.edu.in/ என்ற இணையதளத்தை பார்க்கவும்.

இவ்வாறு, செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAMANI

27 FEB 2023

PAGE 3

# நாளை புதுவை பல்கலை. பட்டமளிப்பு விழா

**புதுச்சேரி, பிப். 26:** புதுவை பல்கலைக்கழகத்தின் 29-ஆவது பட்டமளிப்பு விழா செவ்வாய்க்கிழமை (பிப்.28) நடைபெறுகிறது.

விழாவில் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டங்களை வழங்குவதாக இருந்தது. இந்த நிலையில், தவிர்க்க முடியாத நிர்வாகக் காரணங்களால் அவரது வருகை ரத்து செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து பல்கலைக்கழக நிர்வாகம் சார்பில் கூறப்பட்டதாவது:

பட்டமளிப்பு விழாவில் பல்கலைக் கழகத் தலைமைக் காப்பாளரும் துணை நிலை ஆளுநருமான (பொ) தமிழிசை செளந்தரராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

குடியரசு துணைத் தலைவரால் வருகைதர இயலவில்லை என்பதுடன், பட்டம் பெறுவோருக்கு வாழ்த்துச் செய்தியும் அனுப்பியுள்ளார்.

நிகழ்ச்சியில் முதல்வர் என்.ரங்கசாமி, மாநில கல்வித் துறை அமைச்சர் ஆ.நமச்சிவாயம், மக்களவை உறுப்பினர் வெ.வைத்திலிங்கம், மாநிலங்களவை உறுப்பினர் சு.செல்வகணபதி உள்ளிட்டோரும் பங்கேற்கின்றனர். நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை வகிக்கிறார்.